# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.20 நாள் 11.11.2025

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | க/பெ. | வீரமணி |
| வயது | 30/25 | தொழில் | ஹோட்டல் |
| கிராமம் | வில்லியநல்லூர் | தாலுக்கா | குத்தாலம் |

(எதிரிகள் ஆஜர், )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது வில்லியநல்லூரில் வசித்து வருகிறேன். நான் வில்லியநல்லூரில் ஹோட்டல் வைத்துள்ளேன். 2019ம் வருடம் நான் வேலையை முடித்து வரும்போது இரவு சுமார் 8.00 மணிக்கு குத்தாலம் பேருந்து நிலையம் அருகே கும்பலாக இருந்தது. என்னவென்று பார்த்தபோது அங்கு போலீசார் படம் வரைந்துக்கொண்டிருந்தனர். அதற்கு சாட்சியாக என்னையும், கார்த்திக்–ம் சாட்சியாக கையெழுத்து போட்டோம். வேறு எதுவும் இந்த வழக்கு குறித்து தெரியாது. எதற்காக கையெழுத்து போட்டேன் என்று தெரியாது. போலீசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

11/11/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.21

நாள் 11.11.2025

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | க/பெ. | பாலகன் |
| வயது | 30/25 | தொழில் | ஹோட்டல் |
| கிராமம் | வில்லியநல்லூர் | தாலுக்கா | குத்தாலம் |

(எதிரிகள் ஆஜர், )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது குத்தாலத்தில் வசித்து வருகிறேன். நான் வில்லியநல்லூரில் ஹோட்டல் வைத்துள்ளேன். 2019ம் வருடம் நான் வேலையை முடித்து வரும்போது இரவு சுமார் 8.00 மணிக்கு குத்தாலம் பேருந்து நிலையம் அருகே கும்பலாக இருந்தது. என்னவென்று பார்த்தபோது அங்கு போலீசார் படம் வரைந்துக்கொண்டிருந்தனர். அதற்கு சாட்சியாக என்னையும், விக்னேஷ்–ம் சாட்சியாக கையெழுத்து போட்டோம். வேறு எதுவும் இந்த வழக்கு குறித்து தெரியாது. எதற்காக கையெழுத்து போட்டேன் என்று தெரியாது. போலீசார் கேட்டதால் கையெழுத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

B Karthik

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

11/11/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.22

நாள் 11.11.2025

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | சிவசண்முகம் | க/பெ. | அங்காசய்யா |
| வயது | 78 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | குரவபுலம் | தாலுக்கா | வேதாரண்யம் |

(எதிரிகள் ஆஜர்.)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது வேதாரண்யம், குரவபுலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது 77 வயதாகிறது. நான் விவசாயம் செய்து வருகிறது. நான் Old SSLC படித்துள்ளேன். 1969ம் வருடம் ஹோமியோபதி ஈஸ்டர் ஹோமியோ இன்ஸ்யூட்டில் 6 மாதம் படித்தேன். நான் வீட்டு மருந்து யாராவது அழைத்தால் கொடுத்து வந்தேன். 20 வருடம் முன்பு வரை அவ்வாறு மருந்து கொடுத்து வந்தேன். அதன் பிறகு விவசாயம் பார்த்து வீட்டில் இருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் சான்றிதழில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். அந்த ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-

என்னை போலீசார் விசாரித்தபோது மதுரை அமெரிக்கன் கல்லூரியில் அரசு தேர்வு எழுதினேன் என்றும், தேர்ச்சி பெற்றேன் என்றும், அஞ்சல் மூலம் தகவல் கிடைத்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். செம்போடை சொக்கலிங்கம் என்பவரை தெரியும். செம்போடை சொக்கலிங்கம் என்பவர் என்னிடம் குத்தாலத்தை

CJM, MAYILADUTHURAI.

சேர்ந்த செல்வராஜ் குத்தாலத்தில் Natural Board of Alternative Medicine என்ற பெயரில் சித்த மருத்துவ பயிற்சி நடத்தி வருகிறார் என்றும், அது 6 மாதம் பயிற்சி என்றும், அதற்கான கட்டணம் ரூ.5000/– கட்ட வேண்டும் என்று கூறினாரா என்றால் கூறினார் (அரசு தரப்பு வழக்கறிஞரிடம் போலீஸ் விசாரணையின் போது அவ்வாறு கூறினாரா என்று கேள்வி எழுப்பும்படி நீதிமன்றம் கேட்க சொன்னதற்கு கடைசியாகத்தான் அவ்வாறு கேட்கமுடியும் என்று கூறியதால் மேற்கூறியவாறு பதிவு செய்யப்பட்டது). ஆனால், நான் பணம் எதுவும் கட்டவில்லை. நான் 6 மாதம் காலம் அங்கு சென்று படித்தேனா என்றால் இல்லை. என்னிடம் முதல் விசாரணையில் காண்பிக்கப்பட்ட சான்றிதழ் நகல் எனக்கு யார் கொடுத்தார்கள் என்பது நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது மேற்படி சான்றிதழில் குத்தாலம் செல்வராஜ் என்பவரும், பெருந்தோட்டம் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் கையெழுத்திட்டு கொடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் அவர்கள் கொடுக்கவில்லை, எனக்கு நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது செம்போடை சொக்கலிங்கம் மூலமாக குத்தாலம் செல்வராஜ் என்பவர் நடத்திய Natural Board of Alternative Medicine இன்ஸ்யூட்டில் சித்த மருத்துவ பயிற்சினை 6 மாதம் காலம் படித்ததாகவும், அதற்காக ரூ.5000/– செலுத்தியதாகவும், 6 மாதம் முடிந்த பிறகு சான்றிதழில் குத்தாலம் செல்வராஜ் என்பவரும், பெருந்தோட்டம் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் கையெழுத்திட்டு சான்றிதழ் கொடுத்து இதை வைத்து ஆங்கிலம் மருத்துவம் செய்யலாம் என்றும், என்னை இந்த பயிற்சி படித்தால் நிறைய பணம் சம்பாரிக்கலாம் என்று ஆசை வார்த்தை கூறி என்னை ஏமாற்றி, அரசாங்கத்தில் பதிவு செய்யாமல் போலியான சான்றிதழ் வழங்கியுள்ளார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

குத்தாலத்தில் எதிரி நடத்திய மருத்துவ படிப்பு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு சான்றிதழ் எதுவும் கொடுக்கவில்லையா

CJM, MAYILADUTHURAI.

என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீஸ் விசாரணையில் என்ன சொன்னேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

11/11/23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.